கவனிக்க.- 2018.04.20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.



# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2069 - 2018 අප්‍රේල් මස 27 වැනි සිකුරාදා - 2018.04.27

2069 ஆம் இலக்கம் – 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)



| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 820 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 821 |



**கவனிக்க.-** (i) காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் 2018, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தம்) சட்டமூலம் 2018, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, மே மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, மே மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

817-B81275 - 5403 (2018/04)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து **சிங்கள மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து **தமிழ் மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, **சிங்கள மொழி** :யில் அல்லது **தமிழ் மொழி** :யில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 **சிங்கள மொழி** : மூலத்தில் அல்லது **தமிழ் மொழி** : மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## நீதிச் சேவைகள் ஆணைக்குழு

*விவசாய மீளாய்வுச் சபை ஒன்றை அமைப்பதற்குத் தேவையான உறுப்பினர்களை (குழு) நியமித்தல்.*

*2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க விவசாய அபிவிருத்திச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க விவசாய அபிவிருத்திச் சட்டத்தின் 42 அ(1) ஆம் பிரிவின் படி மீளாய்வு சபை தாபிப்பதற்காக நீதிச் சேவைகள் ஆணைக்குழுவானது, நீதித் துறையில் மற்றும் விவசாயத் துறையில் பரந்த அறிவுள்ளவர்களிலிருந்து ஒன்பதிற்கு (09) மேற்படாத உறுப்பினர்களை உள்ளடக்கிய சபை (குழு) ஒன்றை மூன்று வருட காலப்பகுதிக்கு நியமிக்கவுள்ளது.*

*அதற்கமைவாக நல்லொழுக்கமும் தேக ஆரோக்கியமும் உடைய 70 வயதிற்கு மேற்படாத பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்களை கோருவதற்கு நீதிச் சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது:-*

*01. ஓய்வு பெற்ற நீதிபதிகள்*
*02. பத்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவமுள்ள சட்டத்தரணிகள்*
*03. விவசாய சேவை சட்டத்துடன் தொடர்புடையதாக விவசாயத் துறையிலே நிறைவேற்றுத் தரத்தில் பத்து வருடங்களுக்கு குறையாத அனுபவமுள்ளவர்கள்*

*சகல விண்ணப்பப்படிவங்களும் 2018.05.27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நீதிச் சேவைகள் ஆணைக்குழுச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேணடும்.*

*நியமனம் பெறும் குழுவின் உறுப்பினர்களுக்கு,*

*மாதாந்த கொடுப்பனவு - ரூபா 34,335*
*பிரயாணக் கொடுப்பனவு - ரூபா 10,000 (மாதாந்தம்) வழங்கப்படும்.*

*எச். எஸ். சோமரத்ன,*
*செயலாளர்,*
*நீதிச்சேவைகள் ஆணைக்குழு.*

*நீதிச்சேவைகள் ஆணைக்குழு அலுவலகம்,*
*கொழும்பு 12,*
*2018, ஏப்பிறல் 10.*

*4-863*

---

*திருத்தம்*

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

*விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் மற்றும் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரியினை திருத்தஞ் செய்தல் - அநுராதபுரம் மாவட்டம்*

*2018.03.29 ஆந் திகதிய 2065 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டிருந்த கீழ் குறிப்பிடப்படும் பதவிக்குரிய விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2018.05.28 ஆந் திகதி வரை நீடிப்பதுடன் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் என என திருத்தப்படல் வேண்டும் என இத்தால் அறிவிக்கின்றேன்.*

*02. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி அநுராதபுரம் என மாத்திரம் திருத்தப்பட வேண்டும் என்பதுடன் விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்விதத்திலேயே அதிகாரம் செலுத்தும் என தாழ்மையுடன் கருத்திற் கொள்ளவும்.*

*நீல் த அல்விஸ்,*
*பதிவாளர் நாயகம்.*

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | ஹொரவ்பொத்தானை | வடக்கு மஹபொத்தான பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹுருலு பலாத பிரிவின் விவாக (கண்டிய / பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |

*4 - 966*

---

திருத்தம்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

மேலதிக விவாக பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் மற்றும் பிரிவினைத் திருத்தஞ் செய்தல் - குருநாகல் மாவட்டம்

*2018.03.29 ஆந் திகதிய 2065 ஆம் இலக்க இலங்கைச் சனாநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டிருந்த கீழ் குறிப்பிடப்படும் பதவிக்குரிய விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2018.05.28 ஆந் திகதி வரை நீடிப்பதுடன் விவாகப் பிரிவினை யகம்பத்து கோறளை பிரிவின் கட்டுகம்பலை ஹத்பத்துவ பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி என திருத்தப்படல் வேண்டும் என இத்தால் அறிவிக்கின்றேன்.*

*02. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் விவாகப் பிரிவு மாத்திரம் திருத்தப்பட வேண்டும் என்பதுடன் விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்விதத்திலேயே அதிகாரம் செலுத்தும் என தாழ்மையுடன் கருத்திற் கொள்ளவும்.*

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | உடுபத்தாவ | யகம்பத்து கோறளை பிரிவின் கட்டுகம்பலை ஹத்பத்துவ பிரிவின் மேலதிக விவாக (கண்டிய /பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |

*04 - 967*

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சமூகவலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

*(1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 25ஏ பிரிவின் கீழ் பட்டம் வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.)*

**சமூகப்பணி முதுமாணி (தமிழ் மொழி மூலம்)**

(MSW) - 2018/2019

*சமூகவலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் இப்பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சமூக நலன்புரி துறைக்கும் ஏனைய நிறுவனங்களுக்குமிடையிலான*

ஒருங்கிணைப்புக்குத் தேவையான தொழில்வாண்மையான சமூகப்பணி மற்றும் முகாமைத்துவத்திற்குத் தேவையான மனித வளத்தை மேம்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் :-**

விண்ணப்பதாரிகள் பின்வரும் அடிப்படைத் தகைமைகளுள் ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் :

- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்லைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொண்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புடனான கௌரவ இளமாணிப் பட்டம் ; அல்லது

- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொண்ட பட்டத்துடன் ஒருவருட பட்டப்பின் கற்கை ; அல்லது

- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்லைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக் கொண்ட பட்டத்துடன் பட்டம் பெற்ற பின்னர் மூன்று வருடம் சமூக நலன்புரி நிறுவனமொன்றில் பணியாற்றிய அனுபவம்;

- பீடசபையின் சிபாரிசின் அடிப்படையில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் பிரத்தியேகமாக கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும் இளமானிப் பட்டத்திற்கு சமமான தொழில்வாண்மைத் தகைமைகளும் அதன் பின்னரான மூன்று வருட சமூக நலன்புரி நிறுவனமொன்றில் பணியாற்றிய அனுபவம்

- ஆங்கில மொழித்திறன் விரும்பப்படத்தக்கது.

| | |
|---|---|
| மொழிமூலம் | : தமிழ் /சிங்களம் |
| காலம் | : 02 கல்வியாண்டுகள் (வெள்ளிக்கிழமை மாலையிலும் சனிக்கிழமைகளில் முழுநாளும்) |
| இப்பாடநெறிக்கான கட்டணம் | : 2,27,000 |

மேலதிக தகவல்களையும் விண்ணப்பப்படிவத்தையும் எமது இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யலாம் www.nisd.ac.lk

சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2018.05.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் "பதிவாளர், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், 488 ஏ, நாவல வீதி, இராஜகிரிய" எனும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பத்துடன் கீழ்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்:

- பட்டச் சான்றிதழ் மற்றும் மற்றைய சான்றிதழ்களின் சான்றுப்படுத்தும் பிரதிகள் ;
- தொழில் அனுபவத்தை சான்றுப்படுத்தி நிறுவன பிரதானியின் கடிதம்.

"சமூகப்பணி முதுமாணி தமிழ் மொழி மூல கற்கைநெறி 2018/19 இற்கான விண்ணப்பம்" என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்

National Institute of Social Development

| | | |
|---|---|---|
| Tel | : | 0112 882506/7, 0112076021 |
| Fax | : | 0112 882502 |
| E - mail | : | nisd@slt.lk |
| Web | : | www.nisd.ac.lk |

4 - 954

---

## தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு

### தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் III ஆம் தரத்தில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு மூலம் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறு மற்றும் செவிமடுத்தற் திறன் பரீட்சையின் பெறுபேற்றிற்கு அமைய திறன் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள் தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் III ஆம் தரப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

3. நியமிக்கப்படுவோர் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். குறிப்பிட்டளவிலான வெற்றிடங்களை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் பூர்த்தி செய்யாதிருப்பதற்கான அதிகாரம் அமைச்சின் செயலாளருக்கு இருப்பதோடு, ஆட்சேர்ப்பு செய்யப்படுவோர் நாடு முழுவதுமுள்ள பிரதேச செயலகங்களில் காணப்படும் வெற்றிடங்களுக்கு இணைக்கப்படுவர்

4. மாதாந்த சம்பள அளவுத் திட்டம் (பொ.நி.சுற்றறிக்கை 03/2016 பிரகாரம்)
MN 1-2016, ரூபா 27,140 – 10 x 300 – 11 x 350 – 10 x 495- 10 x 660 – ரூபா 45,540.

5. இப் பதவி நிரந்தரமானது என்பதுடன் ஓய்வூதியம் குறித்து அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு நீங்கள் கட்டுப்படல் வேண்டும்.

6. **தகைமைகள்** .- தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் III ஆம் தரப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும். அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் பதவிக்குரிய சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பது கட்டாயமாகும்.

6.1 ***கல்வித் தகைமைகள்:***

(அ) I. சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களை கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்;

மற்றும்

II. கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு பாடத்திலேனும் (பொது அறிவுப் பரீட்சையை விடுத்து) சித்தியடைந்திருத்தல்;

மற்றும்

(ஆ) I. கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் பிரதான பாடமாக மற்றைய அரச கரும மொழியில் (சிங்களம்/தமிழ்) திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல்;

அல்லது

II. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 6 மாதத்திற்குக் குறையாத மற்றைய அரச கரும மொழிக்கான(சிங்களம்/தமிழ்) சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்;

**குறிப்பு** : விண்ணப்பதாரிகள் மேற்குறித்த கல்வித் தகைமைகளுள் (அ) வின் கீழான தகைமைகள் அனைத்தையும் மற்றும் (ஆ) வின் கீழான தகைமைகளுள் ஒன்றினையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6.2 ***தொழில்சார் தகைமைகள்.***- ஏற்புடையதன்று

6.3 ***அனுபவம்*** .- ஏற்புடையதன்று

6.4 ***உடற் தகைமைகள்:-*** அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்கான கடமைகளை ஆற்றுவதற்குமான போதிய உடல், உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.5 ***வேறு :-*** I. இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும்;

II. விண்ணப்பதாரிகள் நன்னடத்தை உடையோராக இருத்தல் வேண்டும்.

6.6 ***வயதெல்லை*** :- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

7. **பரீட்சை விதிமுறை :-**

7.1 எழுத்துப் பரீட்சை 02 வினாப்பத்திரங்களைக் கொண்டது. குறித்த பரீட்சைகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதோடு, விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றஞ் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

7.2 அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ள நாடு முழுவதிலுமுள்ள நகரங்களில் பரீட்சை நடைபெறும். பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கும் நகரத்தைப் பின்னர் மாற்றஞ் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்திற்கு விண்ணப்பித்தோரின் எண்ணிக்கை குறைவாக இருப்பின் அண்மையிலுள்ள நகரத்தின் பரீட்சை நிலையமொன்றில் நடைபெறும்.

(கடமைகளின் பொருட்டு விண்ணப்பதாரிகளின் தகைமைகள் மற்றும் திறனை பரிசீலிப்பதற்காக இப் பரீட்சை வினாத்தாள் தயாரிக்கப்படுகிறது)

7.3 பரீட்சையை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

8. **ஆட்சேர்ப்பு நடைமுறை :-**

(அ) எழுத்து மற்றும் வாய்மூலப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துப் பரீட்சையில் இரண்டாம் மொழித் திறன் வினாத்தாளுக்கு 50 புள்ளிகளுக்கும் அதிகமாகப் பெற்றுக்கொள்ளும் மற்றும் பொது உளச்சார்பு வினாத்தாளுக்கு 40 புள்ளிகளுக்கும் அதிகமாகப் பெற்றுக்கொள்ளும் அனைத்து விண்ணப்பதாரிகளையும் பேச்சு மற்றும் செவிமடுத்தல் திறன் பரீட்சைக்கு உட்படுத்தி அப்பரீட்சையில் 50 புள்ளிகளுக்கு அதிகமாகப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளுள் முன்னுரிமை அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்கானோரை பொதுவானதொரு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றச் செய்து, அடிப்படைத் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு, பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் ஒழுங்கில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

(ஆ) பரீட்சை குறித்த விபரம் :

| *பாடம்* | *பாட எண்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தி பெறத் தேவையான புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 1. இரண்டாம் மொழித் திறன் | 01 | 01 மணித்தியாலம் | 100 | 50 |
| 2. பொது உளச்சார்பு | 02 | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 3. பேச்சு மற்றும் செவிமடுத்தல் | 03 | 01 மணித்தியாலம் | 100 | 50 |

(இ) பாடத் திட்டம் :-

| *வினாத்தாளின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| இரண்டாம் மொழித் திறன் | இவ் வினாத்தாளானது பரீட்சார்த்திகளின் இரண்டாம் மொழி குறித்த கருத்து வெளிப்பாடு, கிரகித்தல், எழுத்துக் கூட்டுரு மற்றும் எளிய இலக்கணப் பாவனை தொடர்பான அறிவு என்பவற்றைப் பரீட்சிக்கும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும். |
| பொது உளச்சார்பு | இவ் வினாத்தாளானது பரீட்சார்த்திகளின் புள்ளியியல் திறன்கள், தர்க்கத் திறன், பொது அறிவு முதலானவற்றை மதிப்பிடும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும். |
| பேச்சு மற்றும் செவிமடுத்தல் | இத் தேர்ச்சிப் பரீட்சார்த்திகளின் இரண்டாம் மொழி குறித்த பேச்சு மற்றும் செவிமடுத்தல் திறன் தொடர்பான அறிவை பரீட்சிக்கும் வகையில் அமைந்திருக்கும். |

9. **பிழையான தகவல்களுக்கான தண்டனை**:- விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்கையில் மிக அவதானத்துடன் சரியான தகவல்களைக் குறிப்பிடல் வேண்டும். இப் பரீட்சை விதிமுறைகளுக்கு அமைய எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் என்பது வெளிப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறுகையிலோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் அவரது அபேட்சகத்துவத் தன்மை இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் பொய்யானது எனத் தெரியவரின் அவரை அரச சேவையிலிருந்து விலக்க முடியும்.

10. **பரீட்சைக் கட்டணம்** :- பரீட்சைக் கட்டணமான 500.00 ரூபாவினை அரசாங்கத்தின் வருமானத் தலைப்பு 2003-99-00 இற்கு வரவாகும் வகையில் நாட்டிலுள்ள எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். அதன் பிரதியொன்றை உங்கள் வசம் வைத்திருத்தல் பயனுடையதாக இருக்கும். பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டானது விண்ணப்பதாரியின் பெயரிலேயே விநியோகிக்கப் பட்டிருத்தல் கட்டாயமாகும். பரீட்சைக் கட்டணமானது எக் காரணத்தைக் கொண்டும் மீண்டும் செலுத்தப்பட மாட்டாது.

**கவனத்தில் கொள்க**

10.1 2017.03.31 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப இந்தப் பதவிக்கான குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பபடிவத்தை முன்வைத்துள்ள விண்ணப்பதாரிகள் முன்பு வழங்கப்பட்டிருந்த கல்வித்தகைமைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் மட்டும் விண்ணப்பத்தை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டியுள்ளதுடன் மீண்டும் பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டியதில்லை.

10.2 குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தாது விண்ணப்பப்படிவங்களை முன்வைக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகள் மீண்டும் பரீட்சைக் கட்டணத்தைச்செலுத்தி விண்ணப்பப்படிவத்தை அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

11. **விண்ணப்பப்படிவங்கள்**.- A4 (24 X 29 செ.மீ) அளவிலான தாளைப் பயன்படுத்தி,

(அ) இலக்கம் 01 முதல் 2.4 வரையான பந்திகள் முதற் பக்கத்திலும்,

(ஆ) இலக்கம் 03 முதல் அடுத்து வரும் பந்திகள் ஏனைய பக்கங்களிலும் அடங்குமாறு விண்ணப்பப்படிவத்தை தயாரித்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கையில் அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை, சிங்கள மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும்.

உரிய தகவல்களை தனது கையெழுத்திலேயே தெளிவாக எழுதுதல் வேண்டும். உரிய முறையில் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரியே ஏற்றல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தம் வசம் வைத்திருத்தல் பயன்மிக்கதாக இருக்கும் என்பதுடன், பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப்படிவம், பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பதை விண்ணப்பதாரி அவதானித்தல் வேண்டும். அவ்வாறல்லாதவிடத்து விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படலாம்.

11.1 விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் - III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018" எனக் குறிப்பிடல் வேண்டும்.

11.2 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாணம் செய்த ஆணையாளர், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பொலிஸ் சேவையின் பதவியொன்றிலுள்ள உத்தியோகத்தர், ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வருடாந்த சம்பளமாகப் பெறும் உத்தியோகத்தர் ஆகியோருள் ஒருவர் சான்றுப்படுத்தியிருத்தல் வேண்டும்.

11.3. பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2018.05.25 .ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்

செயலாளர்,
தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு,
இல.40, புத்கமுவ வீதி,
ராஜகிரிய.

12. 12.1 விண்ணப்பதாரிகளின் ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு பின்வரும் ஆவணங்களுள் ஒன்றை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

* ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய ஆளடையாள அட்டை;
* செல்லுபடியான கடவுச் சீட்டு.

12.2 பரீட்சை நடைபெறும் தினத்தன்று பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் தனது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

13. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பில் அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கு அமைய செயற்படக் கட்டுப்பட்டுள்ளனர்.

எம்.வை.எஸ். தேசப்பிரிய,
செயலாளர்,
தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு.

இல.40, புத்கமுவ வீதி,
ராஜகிரிய,
2018, ஏப்பிறல் 09.

**அட்டவணை - 1**

**நகரங்களின் பெயர்ப் பட்டியலும் இலக்கமும்**

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| மாத்தறை | 03 |
| மட்டக்களப்பு | 04 |
| குருநாகல் | 05 |
| அனுராதபுரம் | 06 |
| பதுளை | 07 |
| இரத்தினபுரி | 08 |
| யாழ்ப்பாணம் | 09 |

மாதிரிவிண்ணப்பப்படிவம்

**தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு**

தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான
திறந்த போட்டிப் பரீட்சை –2018

SPECIMEN APPLICATION FORM FOR THE OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO THE POST OF NATIONAL INTEGRATION COORDINATOR GRADE III -2018 IN THE MINISTRY OF NATIONAL CO-EXISTENCE, DIALOGUE AND OFFICIAL LANGUAGES

மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழியிலான விண்ணப்பப் படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும்.

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:
சிங்களம் – 2
தமிழ் – 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதுக)

* வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் நகரம் மற்றும் நகர இலக்கத்தைக் குறிப்பிடுக.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| | |

(வர்த்தமானி அறிவித்தலின் 7.2ஆம் பந்தியைப் பாருங்கள்)

1.0 1.1 முதலெழுத்துக்களை இறுதியில் எழுதி முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உதாரணம் : PERERA, A.B.C

1.2 முழுப் பெயர் : ..........................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

1.3 முழுப் பெயர் : ..........................................................................................
(சிங்களத்தில் /தமிழில்)

1.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

1.5 பால் : பெண் - 1
ஆண் - 2
(உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதுக)

2.0 2.1 நிரந்தர முகவரி : ..........................................................................................
...............................................................................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.2 நிரந்தர முகவரி : ..........................................................................................
...............................................................................................................................................................
(சிங்களத்தில் /தமிழில்)

2.3 அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி: ......................................
..........................................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.4 தொலைபேசி இலக்கம் (இருப்பின்): .......................................

3.0

3.1 விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டம்: .......................................
3.2 பிரதேச செயலாளர் பிரிவு :.......................................
3.3 வசிக்கும் கால எல்லை: .......................................
3.4 கிராம அலுவலர் பிரிவு: .......................................

4.0 பிறந்த திகதி:
ஆண்டு: ............. மாதம்: ..................... திகதி: ......................

2018.05.21 ஆந் திகதியன்று வயது:
வருடங்கள்: ............. மாதங்கள்: ..................... நாட்கள் : ......................

5.0 கல்வித் தகைமைகள்:

5.1 க.பொ.த. (சா.த.) பரீட்சை குறித்த விபரங்கள்:

(i) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம்: ................................
(ii) சுட்டெண்: ......................................
(iii) பெறுபேறு:

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 01. | | 06. | |
| 02. | | 07. | |
| 03. | | 08. | |
| 04. | | 09. | |
| 05. | | 10. | |

5.2 க.பொ.த. (உ.த.) பரீட்சை குறித்த விபரங்கள்:

(i) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம்: ...............................
(ii) சுட்டெண்: ......................................
(iii) பெறுபேறு:

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 01. | | 03. | |
| 02. | | 04. | |

6.0 நீங்கள் எப்பொழுதாவது ஏதேனும் குற்றச்சாட்டிற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?:
(உரிய கூட்டில் "✓" அடையாளமிடுக)

ஆம் ☐ இல்லை ☐

(ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடுக): ...............................................................................

7.0 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டுக் குறித்த விபரம்:

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம்: ....................................................
(ii) பற்றுச் சீட்டு இலக்கம் மற்றும் திகதி: .....................................................
(iii) செலுத்திய தொகை: .....................................................

| பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டினை கழராதவாறு இங்கே ஒட்டவும்<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை உங்கள் வசம் வைத்திருங்கள்.) |
|---|

8.0 விண்ணப்பதாரியின் சான்றுரை:

(அ) இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நான் அறிந்த வரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு சில பகுதிகளை பூர்த்தி செய்யாமையினால் மற்றும்/ அல்லது பிழையாகப் பூர்த்தி செய்தமையினால் ஏற்படக்கூடிய நட்டத்தை தாங்கிக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும், இங்கு அனைத்து பகுதிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்ட இச் சான்றுரை பொய்யானது என உறுதிசெய்யப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன்னர் தகைமையற்றவர் ஆவேன் என்பதையும் நியமனத்தின் பின்னர் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்குக் கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பில் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் செயலாளரினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்படுகிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றஞ் செய்யமாட்டேன்.

திகதி : .........................

...................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

4-1007

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.